செ.வெ.எண்.92 நாள்: 27.09.2019

**தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.10.50 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு கட்டட பணிகளுக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

---

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.10.50 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு கட்டட பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.09.2019) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் கலந்துகொண்டு, மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு கட்டடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.போ.சின்னப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி பகுதியில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையிலும், தாய் சேய் நலமாக இருக்கும் வகையிலும் கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனைக்காக ரூ.10.50 கோடி மதிப்பில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் தாய்மார்கள் சிறந்த சிகிச்சை பெற்று பயனடைய முடியும். ரூ.2.00 கோடி மதிப்பிலான மருத்துவ உபகரணங்களும் இங்கு வைக்கப்படவுள்ளது.

மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு கட்டிடத்தின் தரைத்தளத்தில் வரவேற்பறை, மருத்துவர் அறை, பதிவறை, அவசர சிகிச்சை, நோயாளிகள் காத்திருக்கும் அறை உள்ளிட்ட அறைகள் அமையவுள்ளன. முதல் தளத்தில் தீவிர சிகிச்சை பிரிவு, பிரசவ அறை, பெண்கள் பிரிவு உள்ளிட்ட அறைகளும், இரண்டாம் தளத்தில் உயர் தீவிர சிகிச்சை பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு, செவிலியர் அறை உள்ளிட்ட அறைகளும் அமையவுள்ளன். தரைத்தளம் மற்றும் 2 தளங்கள் 3395 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்படவுள்ளது. தேவைப்படும்பட்சத்தில் மேலும் இரண்டு அல்லது மூன்று தளங்கள் கூடுதலாக கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே இப்பகுதியில் உள்ள மக்கள் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு கட்டட பணிகள் முடிந்தபின்பு அதனை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.விஜயா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.மோகன், கோவில்பட்டி நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஆர்.கோவிந்தராஜ், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.வெள்ளைசாமிராஜ், உதவி பொறியாளர் திரு.பரமசிவம், கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.பூவேஸ்வரி, உறைவிட மருத்துவர் திரு.மோசஸ், வட்டாட்சியர் திரு.மணிகண்டன், முக்கிய பிரமுகர்கள் திரு.விஜயபாண்டியன், திரு.அய்யாத்துரைபாண்டியன், திரு.இ.பி.ரமேஷ், திரு.வினோபாஜி, திரு.ராமச்சந்திரன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.